முருகப்பெருமான் துணை

**மகான் சூதமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**01.09.2021**, புதன்கிழமை

1. அண்ணலே கலிகாலத் துன்பங்களை
அகற்றி காப்பேன் என அவதாரம்
மண்ணுலகில் புரிந்த அரங்கனே
மாதவராசனே உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ வேங்கை திங்கள்
தெரியவே மூவையோர்திகதி புந்தி வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 16ம் நாள், 01.09.2021 புதன்கிழமை)
தேசிகனுக்கு சூதமுனிவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உலகமெங்கும் ஓங்கார நாதம்
ஞானமாக முழங்கப்பட இனிதே
ஞான ஆட்சிக் காலம் உதயமாகும்
4. ஆகவே மக்களை நோக்கி
அரங்கன் வடிவில் ஆறுமுகனார்
மிகையான ஆசிதந்து அருள
முழுமதி காலம் உலகோர் வந்து
5. வந்துமே ஓங்காரக் குடிலில்
வற்றாத தருமம் தொடரச் செய்து
எந்தவித வகை சார்பிலும்
ஏமாற்றம் உலகோர்க்கு அனுகாதபடி
6. அனுகாதபடி பாதுகாப்புக் கிட்ட
அனுதினமும் செபதபம் செய்து
ஞான தேசிகா ஞானபண்டிதா என
நாளும் வேண்டி வணங்கிவர
7. வருகவே மக்களுக்குத் தயவு
வரமாக வந்தடைந்து நன்கு
தரும பலமாகப் பரவிஇனிதே
தரணியோர்க்கு பாதுகாப்புக் கூடும்
8. கூடவே அரங்கன் ஆசிபட
குவலயங்களில் சீடர்களும் எனும் படை
கூடியே சமூக பலம் கூடிட
குறையிலா ஞான ஆட்சிக்காலம்

9. காலமதும் சடுதி கனிந்து
கலியின் பேரிடர் விலகி ஓடி
ஞாலமெங்கும் பாதுகாப்பு பெருகி
நன்மை நிறைந்த சூழலாகும்

10. ஆகவே அரங்க ஞானி
அருட்தயவால் மாற்றங்கள்
செகமெங்கும் கண்டு இனிதே
சிறப்பாகவே மாற்றங்கள் காணும்

11. காணவே எல்லா வகையும்
கந்தவேலன் வழிபாடு கொண்டே
ஞான பூமியாக மாற்றம்பெறும்
நாட்டிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–